Allotment of flats in Kalaignar Karunanidhi Nagar.

* 142. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(*a*) the total number of persons who applied to the Tamil Nadu Housing Board for the allotment of flats in Kalaignar Karunanidhi Nagar; and

(*b*) total number of persons allotted with flats and the total number of pending cases ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) & (இ)

1.	மொத்தம் மனு செய்தவர்களின் எண்ணிக்கை ...	243
2.	ஒதுக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை ...	216
3.	மனுக்களை திரும்பப் பெற கோரிக் கொண்டவர்களின் எண்ணிக்கை ...	22
4.	கொடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை ...	5

DR. H. V. HANDE : Sir, is it a fact that the Housing Board originally collected one-fourth of the tentative cost and promised to construct flats in six months' time and then they did not keep up their promise. Also whether it is a fact that a number of complaints were brought to the attention of the Government that though they had promised to keep the houses ready, the house have not been kept ready even though the first instalment was collected and if so, what action has been taken by the Government to redress their grievances ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 1/4 பங்கு பணம் வாங்கப்படுவதென்பது உண்மை. ரூ. 7,000 முதலிலேயே கட்டப்பட வேண்டும். ஆனால், நம்முடைய ஹாண்டே அவர்கள் குறிப்பிடுவது போல் எந்தவிதமான குறைபாடும் இதுவரையிலே நம்முடைய கவனத்திற்கு வரவில்லை. கொடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை இன்னும் 5 தான். காலதாமதம் ஏற்படுகிறதா என்பதற்கான தகவல் என்னிடத்திலே இல்லை.

DR. H. V. HANDE : Sir, may I know whether it is not a fact that the Housing Board issued letters to the allottees stating that the plots would be ready for occupation from 10th February 1972

1972 ஆகஸ்ட் 17]

and that the first instalment should be paid. Sir, after the payment of the first instalment, when they went for occupation, they were not ready. Whether this aspect of the matter has been brought to the notice of the Government ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதுவரையிலே அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட வில்லே.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஹவுசிங் போர்டாலே கட்டப்படுகின்ற வீடுகளானாலும் ஃபிளாட்களானாலும் கொஞ்சம் காலதாமதமாவதற்கு முக்கியமான காரணம் சிமெண்ட் கிடைக்க வில்லே யென்று சொன்னார்கள். அதற்குக் காரணம், அதைக் கொண்டு வருவதற்கான வேகன்களை ரயில்வே இலாக்கா சரியான முறையிலே நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு ஒதுக்கவில்லே என்று சொல்லப்படுகிறதே, அந்த வேகன்களை அலாட் செய்வதில் ஏற்படுகின்ற தகராறு காரணமாக, சிமெண்ட் இங்கு காலா காலத்தில் வரவில்லை என்பது உண்மையா? அதுபற்றி அரசாங்கத் திற்கு ஏதாவது தெரியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சிமெண்ட் கொண்டு செல்ல வேகன்கள் மட்டுமல்லாமல், இரும்பு அலாட்மென்ட்–கோட்டா பெறுவதிலே சிரமங்கள் இருக்கின்றன. சிமெண்ட் கிடைப்பதிலே சிரமங்கள் இருந்தாலும், பெரிய குறைபாடுகள் எதுவும் வீட்டு வசதி வாரியத்திலே இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : முன்பணமாக ரூ. 7,000 இப் பொழுது வாங்கப்பட்டிருக்கிறது. காலதாமதம் ஏற்படுவதால், அதற்கான வட்டி போட்டுக் கொடுக்கப்படுமா? அந்த வீடுகளை எப்பொழுது கட்டிமுடிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆரம்பத்தில் ரூ. 750 கட்டி விண்ணப்பம் போட வேண்டும். மொத்த அடக்க விலேயில் 1/4 பகுதியினை கட்டிய பிறகு தான் வீடு தரப்படுகிறது. ஆகவே, ரூ. 7,000-ஐ வீடு தருகிற நேரத்தில் தான் கட்டுகிறார்கள். வெறும் ரூ. 750 கட்டிவிட்டு நெடுங்காலத்திற்கு அந்த வீடு என்ன ஆயிற்று என்று கூடப் பார்க்காத கேஸ்கள் நிறைய இருக்கின்றன. அனேக மாக பணம் கட்டிய அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் இன்னும் கவனிக்கப்பட வேண்டிய கோரிக்கைகள் 5 தான் என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.